**ரிதீகம பிரதேச சபை - 2023**
**----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரிதீகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, ரிதீகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 8,209,540 தொகைக்கான கெப்பிடிகல வாராந்த சந்தைக் கட்டிடம் 2023 மார்ச் 17 திகதி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதியினை கட்டிடப் பெறுமதியிலிருந்து அகற்றியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் குறிப்பிட்ட சரி செய்தல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 395,000 தொகை பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரம் ஏனைய இருப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த 09 நிர்மாண வேலைகளுக்காக செலுத்தப்பட்டிருந்த 174,280 தொகை பெறுமதியினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | மூலதனப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (ஈ) | எரிபொருள் வைப்புப் பெறுமதி ரூபா 300,000 தொகை நிதி நிலைமைக் கூற்றில் முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வைப்புக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முடிவடைந்திருக்காத 06 வழக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 158,680 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், விசாரிக்கப்படும் வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | நடைபெறும் வழக்குகள் தொடர்பாக வெளிப்படுத்தல் ஒன்று நிதிக்கூற்றுக்களில் எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.6.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 2,715,257 தொகைக்கான 02 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே ரூபா 401,933 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அட்டவணைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகள் மற்றும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் சமமான ஒன்றாக இருக்க வேண்டும். |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான தகவல்கள் சமர்ப்பித்திருக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கணக்கு விடயங்களில் ரூபா 41,603,670 தொகை தொடர்பான சான்றுகள் காணப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி / மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | விரைவாக கண்டறிந்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 1646 | 12 வாகனங்களின் பிரயாணங்கள் தொடர்பாக மாதாந்த பொழிப்பின் மூலப் பிரதியுடன் ஒவ்வொரு மாதத்தின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பியிருக்கவில்லை. | ஓட்ட அட்டணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | பொது நிருவாகச் சுற்றறிக்கை | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களின் எரிபொருள் பரசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மிக விரைவில் மேற்கொள்ளப்படும் என. | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2002 பெப்ரவரி 23 திகதிய 01/2002 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான வாகனங்களில் நிறுவனத்தின் பெயருடன் அரச இலச்சினை பதித்திருக்கவில்லை. | மிக விரைவில் மேற்கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | வடமத்திய உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 ஜனவரி 10 திகதிய 2019/02 | 05 கடையறை உரிமையாளர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா | நிலுவை தொகையை அறவீடு செய்ய | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய |

| | | | | |
|---|---|---|---|---|
| | கொண்ட சுற்றறிக்கையின் பிரிவுகள் 2 மற்றும் 20 | 1,698,000 இற்கான ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என. | விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 06 இன் (ஆ) மற்றும் (இ) | 2023 ஆண்டில் புதுப்பிக்கப்பட வேண்டிக் காணப்பட்ட 151 வருடாந்த சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை புதுப்படுத்தி கட்டணம் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்திருக்காத கைத்தொழிலாளர்களுக்கு அவற்றை புதுப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது என. | அந்தக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 14,011,179 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 21,460,953 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 5,562 | 3,549 | 3,430 | 2,761 | 4,753 | 4,910 | 5,304 | 3,170 |
| ii. | வாடகை | 6,070 | 5,619 | 5,521 | 1,184 | 6,415 | 5,427 | 5,624 | 918 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 733 | 654 | 654 | - | 1,092 | 604 | 604 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 32,000 | 32,000 | 34,304 | 38,696 | 20,500 | 20,500 | 17,930 | 21,200 |
| | மொத்தம் | 44,365 | 41,822 | 43,909 | 42,641 | 32,760 | 31,441 | 29,462 | 25,288 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள 1167 வீதவரி அலகுகளில் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வீதவரி ரூபா 2,570,173 தொகை காணப்பட்டது. அவற்றில் 05 வருடங்களை மிகைத்துள்ள மீதிகள் ரூபா 875,433 தொகையாகும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு 2024 ஆண்டின் போது ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித் திட்டமொன்று மற்றும் நடமாடும் நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன என. | நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டிய ஏக்கர் வரி ரூபா 161,412 இற்கான மீதியொன்று காணப்பட்டது. | நிலுவை மீதிகளுக்குரிய காணிகளை இனங்கண்டு அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக தற்போது கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 18 கடையறைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட நிலுவை கடை வாடகையாகிய ரூபா 856,821 தொகை ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 05 வருடங்களை மிகைத்துள்ள மீதி ரூபா 384,009 தொகையாகும். | தேவையான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,303,670 தொகை மற்றும் 40,000,000 தொகையாக காணப்பட்டது. | விரைவாக அந்தத் தொகைகளை தருவித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை தருவித்துக் கொள்வதற்கும் அதன்படி கணக்குகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 47 கட்டிட அனுமதிப்பத்திரம் கிடைத்திருந்ததுடன், அவற்றில் 20 விண்ணப்பங்களுக்கு ஒரு மாதம் முதல் ஒரு வருடமும் 13 நாட்கள் வரையான கால தாமதம் ஒன்றுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் இந்த குறைபாடுகளை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | வீதவரி அதிகாரப் பிரதேசத்திற்கான கட்டிட வரைபுகள் அங்கீகரித்தல் கால தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமான 24 கடையறைகள் அரச விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் உரிய பெறுமதி மதிப்பீட்டின் படி உடன்படிக்கைகளை புதுப்பிக்காமல் பழைய பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையிலே நடாத்தப்பட்டு வந்திருந்தது. | புதிய பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியின் படி உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | புதிய பெறுமதி மதிப்பீட்டின் படி கடை வாடகையை அறவீடு செய்வதற்கும் அதன்படி, கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | கப் வண்டியொன்றின் மற்றும் டேலர் ஒன்றின் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 மார்ச் 27 திகதி உள்ளூராட்சி திணைக்களத்தில் நடாத்தப்படுகின்ற விஷேட வாகனங்களை உரிமையாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இந்த வாகனங்களை உரித்தாக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என. | உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 05 காணிகளை உரித்தாக்கி தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்குரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | 1947 இன் 08 ஆம் இலக்க அரசுக்கு உரிமையான காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 2.4.1 இன் படி செயற்பட்டு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் ரூபா 214,700 தொகை செலுத்தி கொள்வனவு செய்திருந்த 02 விரல் அடையாள இயந்திரங்கள் மற்றும் ரூபா 159,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 100 வீதி விளக்குகளுக்காக பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.6 இன் படி விவரக் குறிப்புக்கள் காணப்படாததுடன், தொழிற்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்றும் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் அவ்வாறான கொள்வனவுகளுக்காக விவரக் குறிப்புக்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு ஒத்ததாக செயற்பட வேண்டும். |

### 3.5 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புரநெகும செயற்திட்டத்தின் மூலம் ரூபா 44,047,815 இற்கான நிதியம் பயன்படுத்தப்பட்டு தரை மாடி மற்றும் இரண்டு மாடிகள் பாதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரிதிகம பஸ் தரிப்பிடம் மற்றும் பல் கரும கட்டிடம் 2017 ஆண்டில் சாட்டப்பட்டிருந்த போதிலும், பாதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பஸ் தரிப்பிடம் மற்றும் பல் கரும கட்டிடத்தை பயன்படுத்தப்படாமையால் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 5,526,914 இற்கான செலவு விளைவற்ற செலவொன்றாக மாறியிருந்தது. | செயற்திட்டத்தின் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்ய முடியாமல் போனமையால் பயன்படுத்த முடியாமல் போனதுடன், கிரயம் விலைவற்றதாகியுள்ளது என. | நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான கல் உருளை மற்றும் மிட்சுபிசி கப் வண்டி அப்புறப்படுத்துவற்கு அல்லது திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளதென அறிவிப்பதுடன், கல் உருளை திருத்த வேலை மேற்கொள்ளல் பயனற்றதொன்றாகும் என. | அப்புறப்படுத்த வேண்டிய வாகனங்களை விரைவாக அப்புறப்படுத்துவதற்கும் மற்றும் திருத்தல் வேலை மேற்கொண்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை 01 மாத்திரம் காணப்பட்டமையால் போதிய உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொண்டிருக்காததுடன், கணக்காய்வு கடமைகளுக்கு மேலதிகமாக எதிர்வுகூறல் அறிக்கை தயாரிக்கும் கருமங்களும் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு சாட்டப்பட்டிருந்தது. | உள்ளகக் கணக்காய்வு போதியளவாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | அனைத்துத் துறைகளும் அடங்கக் கூடியவாறு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். |